தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005
முதன்மைக் கல்வி அலுவலகம்
வேலூர்

பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி), வேலூர்.

ஓ.மு.எண்.2347 /அ4/2024 நாள்: 09.07.2024

பொருள்: தகவல் அறியும் உரிமை சட்டம் – 2005 – நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம், திரு.அ.இன்பரசன் என்பார் கோரிய தகவல்கள் அனுப்ப தெரிவித்தல் – சார்பு

பார்வை: 1. சென்னை, பள்ளிக் கல்வி இயக்ககம் பொதுத் தகவல் வழங்கும் அலுவலர்/உதவி இயக்குநரின் (சுற்றுச்சூழல்) ஓ.மு.எண்.30797/டபிள்யு5/ இ1/2023 கடித நாள். 06.06.2024
2. நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம், 18/4,மேற்கு கடை வீதி, ICICI வங்கி அருகில், திரு.அ.இன்பரசன் என்பாரின் தகவல் அறியும் உரிமை சட்டம்–2005 – மனு நாள் : 24.05.2024

---

தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005–ன் கீழ் பார்வை 2இல் காணும் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களே பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் என்பதனால், மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு தகவல் அளிக்கும் பொருட்டு தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 – பிரிவு 6(3)ன்படி மனுதாரருக்கு உரிய காலக் கெடுவிற்குள் தகவல்களை நேரடியாக பார்வை 2இல் காணும் மனுதாரருக்கு அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

**கோரப்பட்ட தகவல்கள்**

1. தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 2009 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை பணிபுரிந்த மற்றும் பணியாற்றி வரும் உடற்கல்வி இயக்குநர் நிலை –1 ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் பணிபுரியும் பள்ளியின் பெயர் விவரம்.
2. உடற்கல்வி இயக்குநர் நிலை –1 பதவிக்கு அவர் தேர்வான முறை, நாள் மற்றும் ஆண்டின் விவரம்.
3. அவர்கள் பெற்ற இளங்கலை பட்டம் பற்றிய விவரம்.
4. B.P.Ed., தேர்ச்சி பெற்ற ஆண்டு மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விவரம்.
5. M.P.Ed., தேர்ச்சி பெற்ற ஆண்டு மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விவரம்.

பொது தகவல் வழங்கும் அலுவலர் (ம),
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர்
(மேல்நிலைக் கல்வி),
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்
அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளி
வேலூர் மாவட்டம்.
நகல்
திரு.அ. இன்பரசன்,
வழக்கறிஞர்,
18/4,மேற்கு கடை வீதி,
ICICI வங்கி அருகில்,
சேந்தமங்கலம்.
நாமக்கல் மாவட்டம் –637 409.